# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:77 **தேதி**:-18.11.2015

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு BSNL ஊழியர் சங்கம் உதவி

அன்பார்ந்த தோழர்களே,

கடந்த சில நாட்களாக தமிழகத்தில் பெய்து வந்த கனமழையால் தலைநகராம் சென்னை உட்பட பல மாவட்டங்கள் தத்தளித்து வந்ததை நாம் அனைவரும் செய்தி பத்திரிக்கைகள் வாயிலாக தெரிந்து வருகிறோம். இது இயற்கை செய்த சதியா? இல்லை தவறான நிர்வாகமா? இல்லை நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்தவர்களின் தவறா? என்பது பல மட்டங்களில் விவாதிக்கப்பட்டு சரியான தீர்வை காண வேண்டியது அவசியம் தான். ஆனால் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டியது ஓரளவிற்கு நல்ல ஊதியம் வாங்கும் நம்மை போன்றவர்களின் கடமை. அந்த உணர்வோடு நமது தமிழ் மாநில சங்கம் மாநிலம் முழுவதும் உள்ள நமது மாவட்ட சங்கங்களின் உதவியை நாடியது. கேட்ட மூன்று நாட்களுக்குள் அனைத்து மாவட்ட சங்கங்களும் மனமுவந்து இந்த உதவியை செய்ய ஒத்துக் கொண்டு, சுமார் 49,100 ரூபாய்களை அள்ளி தந்தனர். மேலும் நாம் உருவாக்கிய உழைக்கும் வர்க்கம் கல்வி அறக்கட்டளை ரூ.50,000 கொடுத்தனர்.

மொத்தமாக ஒரு லட்ச ரூபாய்க்கு அரிசி, பெட்ஷீட், பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்களை வாங்கி 17.11.2015 அன்று சென்று கடலூர் மாவட்டம் பன்ருட்டி அருகில் உள்ள காடம்புலியூர், பெரிய காட்டுப் பாளையம் மற்றும் விசூர் உள்ளிட்ட கிராமங்களுக்கு சென்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த பொருட்களை தமிழ் மாநில சங்கம் கொடுத்துள்ளது. அதே நாளில் அங்கு வந்திருந்த ஆயிள் காப்பீட்டு ஊழியர் சங்க தலைவர்கள் மற்றும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் ஆகியோருடன் இணைந்து தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.அண்ணாமலை, CGM(O) மாவட்ட செயலாளர் தோழர் K.V.சிவகுமரன், மாவட்ட தலைவர் தோழர் S.அன்புமணி, கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் K.T.சம்பந்தம், உதவி மாவட்ட செயலாளர் தோழர் R.V.ஜெயராமன் மற்றும் AIBDPA கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.முத்துக்குமாரசாமி ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை நாம் வழங்கிய போது, பெரு வெள்ளத்தால் தங்களின் உடமைகளையும், உற்றார் உறவினர்களின் உயிர்களையும் இழந்த மக்களின் கதறல் நம் நெஞ்சை உலுக்கியது. பெரிய காட்டுப்பாளையத்தில் ஒட்டு மொத்தமாக 10 உயிர்களை பறி கொடுத்த இடத்தில் வீடு இருந்ததற்கு அடையாளமாய் அங்கிருந்த ஒரு சில துணி மணிகளும், பள்ளி நோட்டு புத்தகங்களும் தான் இருந்தது. மார்க்ஸிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் G.ராமகிருஷ்ணன் ஒரு நோட்டை எடுத்த பார்த்த போது அதில் எழுதியிருந்த வாசகங்கள், 'நமது உடலை நீரால் சுத்தம் செய்ய முடியும். அகத்தூய்மையை வாய்மை தான் செய்யும்". அதை படித்த தோழர் அங்கு நம்மிடம் பேசும் போது உடலை தூய்மை செய்யும் தண்ணீர் பெரு வெள்ளமாய் மாறியதால் அந்த உடலில் உள்ள உயிரையே பறித்து விட்டதே என்று சொல்லும் போது துக்கம் நம் தொண்டையை அடைத்தது என்று சொன்னால் மிகையாகாது.

வெள்ளத்தால் இழந்த உயிர்களை நம்மால் திருப்பித்தர முடியாது. உடமைகளை இழந்தவர்களுக்கு முழு நிவாரணத்தை நம்மால் வழங்க முடியாது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வார்த்தைகளையும், சிறு நிவாரணங்களையும் நம்மால் செய்ய முடிந்ததே என்ற திருப்தி தான் நமக்கு.

இந்த மக்களுக்கு உதவ வேண்டும் என்ற குறுகிய கால இடைவெளியில் தமிழ் மாநில சங்கம் விடுத்த அறைகூவலை ஏற்று செயல்பட்ட அனைத்து மாவட்ட சங்கங்களுக்கும், உதவிய அனைத்து தோழர்களுக்கும், உழைக்கும் வர்க்க கல்வி அறக்கட்டளைக்கும், இந்த பணியில் ஒத்துழைத்து உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலசெயலாளர்**














